# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>நுவரெலியா சீதை அம்மன் ஆலயத்தில் தியான மண்டபம் அங்குரார்ப்பணம்</u>

நுவரெலியாவில் அமைந்துள்ள சீதை அம்மன் ஆலயத்தின் அசோக வன தியான நிலையம் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ விஜித ஹேரத் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா ஆகியோரால் இன்றைய தினம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் கௌரவ பேராசிரியர் ருவான் ரணசிங்க கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர் கௌரவ கலாநிதி மதுர செனவிரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கலாநிதி வி எஸ் ராதாகிருஷ்ணன், ஏனைய சமூகத் தலைவர்கள் மற்றும் இந்தியா இலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

2. தியானம் மற்றும் ஆன்மீக நல்வாழ்வை இலக்காகக் கொண்டு பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் இந்த அசோக வனத்தின் அனுஸ்ரீ தியான நிலையமானது புதுடில்லியை சேர்ந்த பக்தர்களால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அன்பளிப்பின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர் அவர்கள், இவ்வாறு தனிப்பட்ட நன்கொடை மூலமாக ஆன்மீக சேவையினை வழங்கும் இச்செயற்பாடு இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மக்கள் - மக்கள் உறவுகளை மீள உறுதிப்படுத்தும் மற்றொரு சந்தர்ப்பம் என குறிப்பிட்டிருந்தார். அத்துடன் இந்த ஆலயத்திற்கான மகத்தான சுற்றுலா வாய்ப்புகள் குறித்தும் இங்கு சுட்டிக்காட்டிய உயர் ஸ்தானிகர், குறிப்பாக இந்தியா உட்பட்ட நாடுகளிலிருந்து யாத்திரைகளை இலக்காகக்கொண்டு பயணங்களை மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக இந்த ஆலயத்தின் உட்கட்டமைப்பினை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் வலியுறுத்தி இருந்தார்.

3. 2025 ஏப்ரலில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் அந்த விஜயத்தின் போது குறித்த சீதை அம்மன் ஆலயத்தின் உட்கட்டமைப்பு விஸ்தரிப்புக்காக ஆதரவை வழங்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டினை அறிவித்திருந்தார். திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் புனருத்தாரணம் மற்றும் அனுராதபுரத்தில் புனித நகர் வளாகத்தின் அபிவிருத்தி ஆகியவற்றுக்கான ஆதரவை வெளிப்படுத்தும்

அறிவிப்புகளுக்கு மேலதிகமாக, சீதை அம்மன் ஆலயத்துக்கான ஆதரவை வழங்கும் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறான திட்டங்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நாகரீக பிணைப்புகளை பிரதிபலிப்பது மட்டுமில்லாமல் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் இலங்கை சுற்றுலாத் துறைக்கான இந்தியாவின் வலுவான ஆதரவையும் சுட்டிக்காட்டுகின்றது.

******

**கொழும்பு**
**03 ஆகஸ்ட் 2025**